தமிழர் நினைவேந்தல் அகவம் – சுவிஸ்
Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil / www.trfswiss.com / trfswiss@gmail.com

# தமிழீழத் தேசிய மாவீரர் நினைவுப் பேச்சுப்போட்டி 2024

**10 வயதுப்பிரிவு**
(01.01.2014 – 31.12.2014 வரையில் பிறந்தோர்)

## பிரிகேடியர் விதுஷா

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பெண்புலிகளின் வீரவரலாற்றில் மகுடமாய் நிமிர்ந்து நிற்பவர் பிரிகேடியர் விதுஷா. இவர் இரண்டாம் லெப்டினன்ட் மாலதி படையணியின் சிறப்புத்தளபதி. மகளிர் படைப்பிரிவுகளை ஒருங்கிணைத்து, மகளிர் பேரவையைக் கட்டமைத்து வழிப்படுத்தி நின்ற பேராளுமை.

தொலைத்தொடர்புக்கருவி தாங்கி வரும் அவர்குரல் தனித்து நின்று போராளிகளைச் சாதிக்க வைக்கும் துணிச்சலை அள்ளித்தரும். அவரது தம்பியின் வீரச்சாவைத் தெரிந்த பின்னரும் எந்தத் தடுமாற்றமும் இல்லாமல், உறுதி தளராது மிகத்தெளிவாகக் கட்டளைகளைப் பிறப்பித்து, தான் பொறுப்பேற்ற சமரை வெற்றிகரமாக வழிநடத்தியவர் இவர்.

பெண்புலிகளைச் செதுக்கி தலைநிமிர வைத்தவர். தேசவிடுதலையோடு பெண்விடுதலையையும் சாத்தியமாக்கிக் காட்டி, தலைவர் மாமாவின் எண்ணத்துக்குச் செயல்வடிவம் கொடுத்தவர். ஒப்பரேசன் லிபரேசன் நடவடிக்கையில் தொடங்கிய இவரது களமுனைப் பயணம் விடுதலைப்புலிகளின் இறுதி முற்றுகைச் சமரான ஆனந்தபுரம் வரை தொடர்ந்தது.

ஆனந்தபுர முற்றுகைக்குள் இருந்து எதிரியைத் திணறடிக்கச் செய்து, 2009 ஏப்ரல் 4 ஆம் நாள் ஆனந்தபுர மண்ணிலே தன்னை விடுதலைக்கு விதையாக்கினார். இன்று ஆண்டுகள் பதினைந்து கடந்து விட்டன. இவரது எண்ணங்களையும் கனவுகளையும் தாங்கி, தமிழீழத் திருநாட்டை மீட்டெடுக்க நாம் ஒன்றுபட்டு உழைப்போம்.

“தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்”